1986 மே 8]

சேத்தியாதோப்பில் சர்க்கரை ஆலை.

706—(* வினா எண் 8049)—திரு. சா. ஜெயச்சந்திரன்: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1985-86 ஆம் நிதியாண்டில் தென்னாற்காடு மாவட்டம் சேத்தியாதோப்பில் சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, (அ) தென்னாற்காடு மாவட்டம், சேத்தியாதோப்பு பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கும் பொருட்டு தனியார் துறையிட மிருந்து பெறப்பட்ட இரண்டு விண்ணப்பங்களும் மற்றும் கூட்டுறவுத் துறையில் பெறப்பட்ட ஒரு விண்ணப்பமும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) 1,250 டன் பிழிதிறன் கொண்ட ஒரு புதிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு சுமார் ரூ. 1,300 இலட்சம் (ரூ. 13 கோடி) செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ) நேற்று, நான் புரட்சித் தலைவருடைய ஆணையின்படி டெல்லிக்குப் போயிருந்தேன். அங்கே, பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களை நான் சந்தித்தேன். சந்தித்து, தமிழகத்திலே எவ்வளவுதூரம் சர்க்கரை உற்பத்தியாகி யிருக்கிறது என்பதையும் மேற்கொண்டு ஆலைகள் இருந்தால், மேற்கொண்டு அன்னியச் செலாவணியை நாம் மிச்சப்படுத்த முடியும் என்பதையும், தமிழகத்திலே 1 இலட்சத்து 1 ஆயிரம் டன் அதிகமாக உற்பத்தி செய்ததன் மூலமாக, ரூ. 30 கோடி அன்னியச் செலாவணியை நாம் மிச்சப்படுத்தி இருக்கிறோம் என்கிற செய்தியை அவரிடத்திலே விரிவாக, தெளிவாக்குகிற வாய்ப்பினை பெற்றிருந்தேன். தெளிவாக்கிய பிறகு அவர்கள் உடனடியாக தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக் கிறார்கள். தக்க நடவடிக்கைகள் எடுத்திருப்பதற்கான அறிகுறிகளை நேற்றே, நான் டெல்லியிலேயிருந்து வந்த பிறகு, அங்கேயிருந்து எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, வெகு

விரைவில் சர்க்கரைக் கொள்கை பற்றி மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களாலே, இந்தப் பாராளுமன்றக் கூட்டத் தொடரில்,—லோக் சபா இன்று முடிவடையவிருக்கிறது. இன்னும் நான்கு, ஐந்து நாட்கள் ராஜ்ய சபா நடக்கவிருக்கிறது. அதற்குள்ளாக, அறிவிப்பாக வரும் என்ற நல்ல செய்தியினை நான் பெற்றிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களிடத்திலே சொல்லி, தமிழக அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இந்தியா பூராவுக்கும் நல்ல சர்க்கரைக் கொள்கை வெகு விரைவிலே கிடைக்கவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஆர். கணபதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சேத்தியாதோப்பு பகுதியில் சர்க்கரை ஆலை அமைக்க கூட்டுறவுத் துறையிலிருந்து ஒரு மனு வந்ததாகச் சொன்னார்கள். இந்தியப் பிரதமர் அவர்கள், சில நாட்களிலே அறிவிப்பார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு அறிவிப்பு வந்தவுடன், சேத்தியாதோப்பு சர்க்கரை ஆலையைத் துவங்குவதற்கு அதற்குண்டான பங்குத் தொகையை வசூல் செய்ய தனி அதிகாரி போடப்படுவாரா? அதோடு, அந்த ஆலை 1986-87 ஆம் ஆண்டுக்குள் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சேத்தியாதோப்பில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்ற விண்ணப்பம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. நான் ஏற்கெனவே சொன்னது போல், பாரதப் பிரதமர் அவர்கள் எடுக்கிற வேகமான நடவடிக்கையின் காரணமாக, வெகு விரைவிலே சர்க்கரை கொள்கை நாட்டுக்கு அறிவிக்கப்பட்டு, அதன் விளைவாக நமக்குக் கிடைக்கிற உரிமங்களின் மூலமாக, சேத்தியாதோப்பு பகுதியில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. பொ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் புதிதாக சர்க்கரை ஆலைகள் எங்கெங்கு அமையப் பெற இருக்கின்றன என்பதை இந்த அரசு அறிவிக்குமா?

1986 மே 8]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு அமைய இருக்கிறது என்பதை அரசாங்கம்தான் முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் 'பி' யூனிட் போன்றவை எல்லாம் சேலத்தில் மோகனூரில் போட இருக்கிறது. திருக்கோயிலூரில் சங்கராபுரத்தில் உள்ள கூட்டுறவு ஆலையில் 'பி' யூனிட் போட இருக்கிறது. பெரம்பலூரில் 'பி' யூனிட் இருக்கிறது. இராமநாதபுரத்தில் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையில் ஒரு 'பி" யூனிட் போட இருக்கிறது.

மத்திய பாட புத்தக வங்கி.

707—(*வினா எண் 5014) திரு. செ. செம்மலை: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இலவசப் பாடப் புத்தங்ககள் வழங்கும் திட்டத்தை மையமாக வைத்து 'மத்திய பாடபுத்தக வங்கி' (Central Text Book Bank) ஏற்படுத்த அரசிடம் ஏதேனும் செயல்திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தற்போது முதலமைச்சர் சத்துணவு திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்குவதாலும், பெரும்பாலான பள்ளிகளில் தனித்தனியாக புத்தக வங்கிகள் செயல்பட்டு வருவதாலும் இலவச பாட திட்டத்தை மையமாக வைத்து மத்திய பாடப் புத்தக வங்கி (Central Text Book Bank) என்று தனியாக ஏற்படுத்த அவசியமில்லை என அரசு கருதுகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்தப் பள்ளிக்கூடங்களிலேயே இப்படிப்பட்ட பாடப் புத்தக வங்கிகள் செயல்பட்டு வந்தாலும் அது அந்தப் பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களின் தேவையை ஓரளவுக்குத்தான் பூர்த்தி செய்யமுடியும் என்று நான் கருதுகிறேன். நான் கேட்க விரும்புவதெல்லாம் இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட இலவசப் பாடப்புத்தகங்களை ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு கொடுத்து